பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 27 வெள்ளிக்கிழமை 10.05.2024 கதிர் 184

# நாட்டின் பொருளாதார மீட்சிக்கு பயணம் தொங்கு பாலத்தில்தான்

## வேறு வழி ஏதுமில்லை என்கிறார் ஜனாதிபதி

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக தொங்கு பாலத்தில் பயணிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை நான் மீண்டும் நினைவுபடுத்துகின்றேன்என்றுதெரிவித்தார் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க. நாடாளுமன்றில்நேற்றுவிசேட உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர்தனதுஉரையில்மேலும் தெரிவித்ததாவது:

☞2

## இது ரகசியம் அல்ல!

வெளிநாடுகளில் கௌரவம் பெற்ற இரு தமிழர்களைப் பற்றிய தகவல்களைத்தான் இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

முதலாம் நபர் கிரிக்கெட் வீரர் வியாஸ்காந். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான இவரே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதலாவது தொழில்முறை கிரிக்கெட் வீரர் என்று சொல்லலாம். உலகின் மிகப் பிரபலமான ஐபிஎல் போட்டிகளில் முதல் முறையாகக் களமிறங்கியிருக்கிறார் இந்த 22 வயது இளைஞர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான வியாஸ்காந், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியில் வலையப் பயிற்சிப் பந்துவீச்சாளராகத்தான் முதலில் சேர்க்கப்பட்டிருந்தார். அந்த அணியில் இடம்பெற்றிருந்த இலங்கை வீரர் ஹசரங்க தொடரிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு வியாஸ்காந் விளையாடும் 11 பேர் அணியில் சேர்க்கப்பட்டார்.

லக்னோ சுப்பர் கெய்ன்ட்ஸ் அணிக்கு எதிராக புதன்கிழமை

☞2

## எம்.பியாகினார் முஜிபுர்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் முஜிபுர் ரஹ்மானை நியமித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்டரீதியாக தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பளித்தது.

☞8

## மீண்டும் அரசியலுக்கு வருவேன்

### டயானா கமகே தெரிவிப்பு

நான் மீண்டும் அரசியலுக்கு வருவேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பேன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டவர் ஒருவர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக

☞2

## இலங்கை போர்க்குற்ற விசாரணையில் சர்வதேசச் சட்ட நியமங்கள் அவசியம்

### பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்து

இலங்கையில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைமீறல்கள் தொடர்பான விசாரணைகளின்போது சர்வதேச சட்ட நியமங்களை முறையாகப் பேணுமாறு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜோர்ஜ் கலோவேயினால் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள இத்தீர்மானவரைவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. இந்தப் போர் தமிழ் மக்களை வெகுவாகப் பாதித்தது. பெரும் எண்ணிக்கையான உயிரிழப்புக்களுக்கும், இடப்பெயர்வுக்கும் வழிகோலிய போர் நிறைவை மே 18 நினைவுறுத்துகின்றது. இந்தப் போரில் உயிரிழந்த அனைத்து உயிர்களையும் நினைவுகூர்ந்து, இதனால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் துன்பங்களைப் புரிந்து கொள்ளும் அதேவேளை, இலங்கையில் நடக்கக்கூடிய போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளின்போது சர்வதேச சட்ட நியமங்களை முறையாகப் பேணுமாறும், பக்கச்சார்பற்ற நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்யும் வகையில் சர்வதேச மேற்பார்வையைக் கோருமாறும் இலங்கை ஆளும் தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை, இலங்கையில் மனித உரிமைகள் நிலவரத்தைக் கண்காணிப்பதற்கும், நல்லிணக்க முயற்சிகளுக்கும் சர்வதேச சமூகம் தொடர்ந்து ஆதரவளிப்பதை ஊக்குவிப்பதுடன்,

☞2

## தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் கனடாவில்



தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு கனேடிய நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

கியூபெக் தமிழ் சமூக அமைப்பு மற்றும் அமைச்சரும், ஸ்காபுரோ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் ஒருங்கமைப்பில் பல கனேடிய தமிழ் அமைப்புகளின் கூட்டாக இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் கனேடிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் என பலரும் பங்குபற்றினர்.

நிகழ்வு நடைபெற்ற மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு நிகழ்வில் கலந்துகொண்ட பெருந்திரளானோர் மலர்வணக்கம் வணக்கம்

☞2

## சஜித்தின் கேள்விக்குப் பதிலளிக்காமல் சபையிலிருந்து வெளியேறிய ரணில்

### நாடாளுமன்றத்தில் நேற்று வெடித்தது சர்ச்சை

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்காமல் சபையில் இருந்து அவர் வெளியேறியதால் நாடாளுமன்றத்தில் நேற்று சர்ச்சை வெடித்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை தொடர்பாக ஆற்றிய விசேட உரை தொடர்பில் தெளிவு பெற நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல ஜனாதிபதியிடம் அனுமதி கேட்டார். அவரும் அனுமதி வழங்கினார்.

அதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுந்து ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்திருந்த சில விடயங்களைச் சுட்டிக்காட்டி அவற்றை விமர்சித்தார். உடனே ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எழுந்து, உரை தொடர்பில் தெளிவு பெற முடியுமே தவிர அது தொடர்பில் விமர்சித்து உரையாற்ற முடியாது என்றார்.

☞2

## ஐ.நா. பிரதிநிதி நேற்று அனுரவுடன் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆன்ட்ரே பிராஞ்ச் (Marc-André Franche) நேற்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவை கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர் பெட்ரிக் மெகார்த்தி (Patrick McCarthy), சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான பகுப்பாய்வாளர் நெத் மினி மெதவல அவர்கள் மற்றும்

☞2

## தொடருந்துகள் மோதி 103 யானைகள் சாவு

### நாடாளுமன்றில் அமைச்சர் தகவல்

கடந்த 10 வருட காலப் பகுதியில் தொடருந்துகள் மோதி 103 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று வன உயிரிகள், வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின் வாய்மூல விடைக்கான வினாக்களின் நேரத்தில் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 103 காட்டு யானைகள் தொடருந்துகள் மோதி உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகள் தொடருந்துகளில் மோதுவதைத் தடுப்பதற்கு முறையான

☞2

## அதிக நேரம் வெயிலில் கிடந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவனில் சுமார் 3 மணி நேரம் கடும் வெயிலில் கிடந்தவர் அதிக வெப்பம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த எஸ்.ஜெயக்குமார் (வயது 45) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்றைய தினம் மதியம் 1 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வீட்டின் பின்புறம் வெயிலில் வீழ்ந்து கிடந்துள்ளார். மது மோதையில் தன்னிலை மறந்து அவர் வீழ்ந்து கிடந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது இறப்புத் தொடர்பில் உடற்கூறாய்வு மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி, ஜெயக்குமாரின் இறப்பு அதிக வெயில் வெப்பத்தினால் ஏற்பட்டது என அறிக்கையிட்டுள்ளார்.-

## சம்பள அதிகரிப்பு வர்த்தமானி வெளியிட்டு ஏமாற்றவேண்டாம்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு ஏமாற்றாமல், உண்மையாக அதிகரிப்பதாக இருந்தால் சம்பளம் தொடர்பான சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குப்படுத்தல்) (திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நடந்த ஆட்டத்தில் வியாஸ்காந் ஐபிஎல் தொடரின் முதலாவது ஆட்டத்தில் களமிறங்கினார். அதில் அவர் விக்கெட்டுக்கள் எவையும் வீழ்த்தவில்லை என்றாலும் முழுதாக 4 ஓவர்களும் பந்து வீசி 28 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தார். அதே ஆட்டத்தில் தமிழ்நாட்டின் நட்சத்திர வேகப் பந்து வீச்சாளர் நடராஜன் 4 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கொடுத்திருந்தார்.

ஐபிஎல் போட்டியின் முதல் ஆட்டத்தில் வியாஸ்காந் சிறப்பாகவே பந்து வீசியிருப்பதால் அவர் மேலும் சில ஆட்டங்களில் சேர்த்துக்கொள்ளப்பட வாய்ப்புக்கள் இருப்பதாகவே கூறுப்படுகின்றது. இதே சன்ரைசர்ஸ் அணியில்தான் முத்தையா முரளிதரனும் சுழற்பந்து வீச்சுப் பயிற்சியாளராக இருக்கின்றார். ஐபிஎல் போட்டியின் தொடர்ச்சியாக வியாஸ்காந் இலங்கையின் அணியின் மேலதிக வீரர்கள் பட்டியலிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

வளர்ந்துவரும் இந்த இளம் வீரரைப் பாராட்-டுவதன் மூலம் மேலும் பல இளம் வீரர்கள் இந்த மண்ணில் இருந்து உருவாகி வருவதை ஊக்கப்படுத்துவோம். அவர்களுக்கு இப்போது இலங்கை அணியையும்தாண்டிவாய்ப்புக்கள் விரிந்துள்ளன.

இரண்டாவது தகவல் பாரிஸில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தும் கௌரவத்தையும் ஈழத் தமிழர் ஒருவர் பெற்றுள்ளதைப் பற்றியதுதான். இந்த ஆண்டு ஜூலை 26 தொடங்குகிறது பாரிஸ் ஒலிம்பிக் போட்டி. ஒகஸ்ட் 11 வரை தொடர்ந்து நடக்கும் இந்தப் போட்டியின் முன்னேற்பாடாக, பிரான்ஸ் நாடு முழுவதும் ஒலிம்பிக் தீபத்தை எடுத்துச் செல்லும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

பிரான்ஸின் பெருநிலப்பரப்பிலும் கடல் கடந்த நிர்வாகத் தீவுகளிலும் சுமார் 12 ஆயிரம் கிலோமீற்றர்கள் தூரத்துக்கு ஆயிரக்கணக்கானவர்கள் அஞ்சல் ஓட்ட முறையில் மாறிமாறிச் சுமந்து செல்லவுள்ளனர். இந்த நீண்ட பயணத்தில் சுமார் நானூறு நகரங்கள் மற்றும் உல்லாசப்பயண மையங்கள் ஊடாகத் தீப்பந்தம் எடுத்துச்செல்லப்படவுள்ளது. தங்கள் கரங்களில் ஒலிம்பிக் சுடரைச் சுமந்து ஓடுவதற்காக நகரங்கள் தோறும் பல ஆயிரக்கணக்கானவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

அப்படி, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒலிம்பிக் சுடரை ஏந்திச் செல்லத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்களில் ஈழத் தமிழரான தர்ஷன் செல்வராஜாவும் இடம்பிடித்துள்ளார்.

இவர், பாரிஸ் நகரில் கடந்த வருடம் சிறந்த பாண் தயாரிப்பில் முதலிடம் பெற்று பிரான்ஸ் நாட்டின் அதிபரது வசிப்பிடமாகிய எலிஸே மாளிகைக்குப் பாண் விநியோகிக்கின்ற பெருமையைப் பெற்றவர்.

இலங்கைக்கு முதன்முதலில் சர்வதேசப் போட்டி ஒன்றில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்தவரா திசைவீரசங்கம் மறைந்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து வியாஸ்காந் போன்றவர்கள் சர்வதேச அரங்கில் மிளிரத் தொடங்கியிருப்பது நம்பிக்கையளிக்கிறது.

இவ்வளவையும் சொல்லிவிட்டு மற்றொன்றைச் சொல்லாமல் விட்டால் நன்றாயிருக்காது அல்லவா! இலங்கை தேசிய கபடி அணிக்கும் இரு தமிழ்ப் பெண்கள் தெரிவாகியுள்ளனர்.

இலங்கைத் தேசிய பெண்கள் கபடி அணி தெரிவில் யாழ்ப்பாண மாவட்டக் கபடிச் சங்கத்தைச் சேர்ந்த வீராங்கனைகளான இ.பிரியவர்ணா, வி.டிலக்ஷனா ஆகியோர் தெரிவாகியுள்ளனர். நேபாளத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய பெண்களுக்கான கபடி போட்டியில் விளையாடுவதற்கு இவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என இலங்கைத் தேசிய கபடி சம்மேளனம் அறிவித்துள்ளது.

தமிழ் இளையோர் சாதிக்கட்டும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறட்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடினமான நேரத்தில் பொருளாதாரத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதற்கான சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். எந்த நிபந்தனையுமின்றி ஆட்சியை பொறுப்பேற்றிருந்தேன்.

அச்சமின்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. இதன்படி, இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி மூன்று சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் பொருளாதார வளர்ச்சி தொடர்பான முன்னறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் பணம் அதிகரித்துள்ளது. நாட்டின் பணவீக்கம் தற்போது 1.5 சதவீதமாக குறைந்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு வட்டி விகிதங்களும் குறைக்கப்பட்டுள்ளன. அந்நிய செலாவணி கையிருப்பு ஐந்து பில்லியன் டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

சவாலான, கடினமான அத்துடன் சரியான பாதையை பின்பற்றியதன் காரணமாகவே இந்த நிலையை அடைய முடிந்தது.

நரகத்தில் வீழ்ந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கை இருந்ததாலேயே ஆட்சியைப் பொறுப்பேற்றேன்.

நாட்டில் உள்ள மக்கள் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையினை விட தற்போது ஓரளவு நெருக்கடியில் இருந்து மீண்டிருக்கின்றார்கள் என்பதே உண்மை.

இந்தப் பயணத்தில் நான் செல்லவேண்டியிருப்பது ஒரு தொங்குபாலத்தில்தான் என்பதை நான் மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன்.

அந்த தொங்குபாலத்தில் பயணிப்பதை தவிர எமக்கு வேறு பாதை எதுவுமில்லை.

எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இந்த வழியை தவிர வேறொரு வழியுமில்லை என்பதை நான் மீண்டும் கூறிக்கொள்கின்றேன்.

எனவே தான் நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் பொதுவான இணக்கப்பாடு மற்றும் பொதுவான உடன்பாடு அவசியமாக காணப்படுகின்றது.

அந்த இணக்கப்பாட்டிற்கு வரக்கூடியவர்கள் இந்த சபையில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமல்ல. சமயத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், தொழிற்துறை தலைவர்கள், வியாபார சங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்போரும் இந்த பொதுவான இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும்.

அவ்வாறான இணக்கப்பாட்டில் பயணித்தால் மாத்திரமே உலகில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக நாம் துரிதமாக தலைநிமிர்ந்து வாழ முடியும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேவேளை நாங்கள் புதியதொரு கருத்து ஒருமைப்பாட்டிற்கு வரவேண்டியது அவசியம்.

எங்களுடைய எதிர்காலம் ஒருகாலம் மதிப்பீடு செய்யப்படும். அதில் நாங்கள் இந்த நாட்டிற்கு துரோகிகளாக இருந்துள்ளோம் என்று முத்திரை குத்தப்பட்டவர்களாக இருப்பதா அல்லது நாட்டை நேசித்தவர்கள் என்பதில் உள்ளடங்குவதா என்பதை சற்று சிந்தித்து பார்க்கவேண்டும்–என்றார்.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் தெரிவித்துவிட்டு அதனை வழங்குவதற்கு 5 வருடங்கள் எடுத்துக் கொண்டீர்கள். அதேபோன்று தற்போது 1700 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக அமைச்சரும் ஜனாதிபதியும் மே தின நிகழ்வில் தெரிவித்திருந்தனர். அதனை நாங்கள் வரவேற்கிறோம். எங்களை பொறுத்தவரை தொழிலாளர்களுக்கு 1500 ரூபா சம்பளமும் அதற்கு மேலதிகமாக கொடுப்பனவும் வழங்குவதாக இருந்தால் அதனை வரவேற்கிறோம்.

அதேநேரம் தொழிலாளர்களின் சம்பளத்தை ஆயிரம் ரூபாவுக்கு மேல் அதிகரிக்க இணங்கப்போவதில்லை என முதலாளிமார் தெரிவித்திருந்த நிலையில், தற்போது 1200 ரூபா சம்பள அதிகரிப்புக்கு இணக்கம் தெரிவித்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். அப்படியானால் ஏன் 1700 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்குவதாக அறிவிப்பு செய்தீர்கள். முதலாளிமார் சம்மேளனத்துடன் இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடி ஒரு தீர்மானத்துக்கு வந்த பின்னர் இதனை அறிவிப்பு செய்திருக்க முடியும்.

அவ்வாறு இல்லாமல் மே தினத்தை பயன்படுத்திக்கொண்டு இவ்வாறான அறிவிப்போன்றை செய்தது பொருத்தம் இல்லை. நான் 30 வருடங்களாக அந்த மக்களுடன் இருந்துவருகிறவன். அதனால் அந்த மக்களின் கஷ்டம் எங்களுக்குத் தெரியும். இவ்வாறு சம்பள அதிகரிப்பு மேற்கொள்வதாக இருந்தால், அது தொடர்பான சட்டமூலத்தைச் சபைக்குச் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு நாங்கள் ஆதரவளிப்போம். மாறாக வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டு தோட்ட மக்களை ஏமாற்ற வேண்டாம்.

அத்துடன் இரத்தினபுரி தும்பர தோட்டத்தில் கணகா என்ற பெண் தொழிலாளியை தோட்ட கண்காணியும் மேற்பார்வையாளரும் மற்றும் ஒருவரும் தாக்கியுள்ளனர். வேலைக்கு ஏன் வரவில்லை என்று கேட்டே இவர்கள் மூவரும் அவரை தாக்கியுள்ளனர். இது சட்டவிரோத நடவடிக்கை. அதனால் இந்தச் சம்பவம் தொடர்பாக அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்ற சட்டத்தின் கீழ் டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பளித்தது. இதையடுத்து அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார்.

இதேவேளை, டயானா கமகே வெளிநாடு செல்வதற்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வியாழக்கிழமை தடைவிதித்துள்ளது.

இந்தநிலையில் "எனது அரசியல் பயணம் இத்துடன் நிற்காது. இன்னும் சில மாதங்களில் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்படும். எதிர்காலத்தில் நான் கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன். நான் எப்போதும் ஜனாதிபதியை ஆதரிப்பேன். நான் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வருவேன்' என்றார் டயானா.

## தொடருந்துகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தொடருந்துத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு ஒன்றிணைந்து தொடருந்து பாதைகளில் காட்டு யானைகள் பயணம் செய்யும் இடங்களை அடையாளப்படுத்தியுள்ளன. இந்தப் பகுதிகளை விசேட பாதுகாப்பு பகுதிகளாகவும், கண்காணிப்பு பகுதிகளாகவும் அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காட்டு யானைகள் கடக்கும் பகுதிகளை தொடருந்து சாரதிகளுக்குத் தெளிவுபடுத்தவும், தொடருந்து பாதைகளில் வளைவுப் பகுதிகளைக் காட்டு யானைகள் கடக்கும் போது அவைகளை முன்கூட்டியே அவதானிக்கும் வகையில் விசேட இயந்திரங்களைப் பொருத்துவதற்கும், தொடருந்துப் பாதை வளைவுகளைத் தொடர்ந்து பராமரிப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது – என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் அனைத்து இனக்குழுக்களுக்குமான கௌரவத்தை உறுதிப்படுத்தல் ஆகியவற்றில் பிரிட்டனின் வகிபாகத்தை மீளவலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று இலங்கையில் தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் மனித உரிமைகள் சார் சவால்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், கலந்துரையாடல்களைக் கட்டியெழுப்புவதிலும் முன்னின்று செயற்படும் பிரிட்டன்வாழ் புலம்பெயர் இலங்கைத் தமிழர்களின் பங்களிப்பை வரவேற்கின்றோம்.

இந்நிலையில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான செயற்திட்டங்களுக்கும், சர்வதேசமீள் கட்டியெழுப்பல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கும் பிரிட்டன் அரசு வழங்கிவரும் ஆதரவை மேலும் விரிவுபடுத்தவேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்.

அத்தோடு இலங்கை வாழ் தமிழ்ச் சமூகத்தின் தற்போதைய நிலைவரத்தை மதிப்பீடு செய்வதற்கும், மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான உலகளாவிய முயற்சிகளில் பிரிட்டனின் வகிபாகத்தை ஆராய்வதற்கும் இந்த அவையில் ஒரு விவாதம் முன்னெடுக்கப்படவேண்டும் எனக் கோருகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தினர்.

தமிழின அழிப்பு நினைவு நாளாக (Tamil Genocide Remembrance Day) மே 18 கனேடிய நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இரண்டாவது வருடமாகவும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 15 வருட வலிமிகுந்த நினைவுநாளை நினைவுகூரும் விதத்திலும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் அன்னி கவுட்ராகிஸ் (புஜஜஷ்ள லுலிற்மிஷழிவஷ்வி) தமிழ் இனப்படுகொலை நாளை ஒட்டி தான் உரையாற்றியது பற்றியும் தொடர்ச்சியாக நீதிவேண்டிய பயணத்திற்குத்த தனது ஆதரவு தொடரும் என்றும் தெரிவித்தார்.

## ஐ.நா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டிருந்தனர்.

சந்திப்பின்போது இலங்கையின் நடப்பு மனித உரிமைகளின் நிலைமை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயன்முறை பற்றி இருதரப்புக்கும் இடையில் விரிவாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறிப்பாக இலங்கையில் நல்லிணக்க செயன்முறையை உன்னிப்பாக அவதானிப்பதாக சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் எதிர்வரும் தேர்தல் செயன்முறைக்குள் அரசியல் கட்சிகளால் பின்பற்றபட வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தினர்.

தமது அரசியல் கலாசாரமானது தொடக்கத்தில் இருந்தே ஒழுக்கநெறிக் கோவையை அடிப்படையாகக் கொண்டிருந்ததென்பதை வலியுறுத்திய தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளுக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் தெரிவித்தது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் உரை தொடர்பில் விவாதம் வேண்டுமென்றால் அதனை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அவரது கருத்தைப் பொருட்படுத்தாத எதிர்க் கட்சித் தலைவர் தனது உரையைத் தொடர முயன்றபோது, எழுந்த ஜனாதிபதி ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தார். தொடர்ந்து "இந்த விடயம் தொடர்பில் சபையில் விவாதம் நடத்தினால் நல்லது என்றே நினைக்கின்றேன், இவை அனைத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவரே பொறுப்புக்கூறவேண்டும். ஏப்ரல் 10 பிரதமர் பதவியை அவர் பொறுப்பேற்றிருந்தால் இவை எதுவும் நடந்திருக்கப் போவதில்லை. நான் எனது பணியைச் செய்துள்ளேன்" என்று கூறிவிட்டு சபையில் இருந்து வெளியேறினார்.

"ஜனாதிபதி! ஏன் போகின்றீர்கள்? அச்சமா? பதிலளிக்க முடியாதா? ஜனாதிபதி உரையாற்றும்போது நான் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேன். எனக்குக் கருத்துச் சுதந்திரம் இல்லையா? எதிர்க்கட்சித் தலைவர் எதையாவது கேட்கவிரும்பினால் இந்தச் சபையில் அது முடிவதில்லை" என்றார்.

இதனால் சபையில் சர்ச்சை ஏற்பட்ட-து. ஜனாதிபதி பதிலளிக்காமல் சென்றது சரி என்று ஆளும் தரப்பினரும் பிழை என்று எதிர்க் கட்சியினரும் மாறி மாறி சத்தம் எழுப்பினர். இதனால் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதியின் உரை தொடர்பில் தெளிவுபடுத்தல் வேண்டும் என்று கூறிக்கொண்டு நேரத்தை வீணடித்து சுற்றி வளைத்து கேள்விகளை கேட்காமல் நேரடியாக பேட்டிருந்தால் ஜனாதிபதி பதிலளித்திருப்பார் என்றார்.

இதே கருத்தையே சபாநாயகரும் தெரிவித்தார். "நீங்கள் (எதிர்க் கட்சித் தலைவர்) தெளிவுபடுத்தலை மாத்திரம் கேட்டிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. எங்களுக்கு சபையின் தின நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது" என்று கூறிய சபாநாயகர் நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து முன்னெடுத்தார்.

## எம்.பியாகினார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் டயானா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார். அவரது பதவியிழப்பால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே முஜிபுர் ரஹ்மானின் பெயர் முன்மொழியப்பட்டு, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட நிலையில், முஜிபுர் ரஹ்மானை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

முஜிபுர் ரஹ்மான் இன்று காலை நாடாளுமன்றில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

டயானாவின் இடத்திற்கு பெண் ஒருவரை மீண்டும் நியமிக்கும்படி கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் ஐக்கிய மக்கள் சக்தி முஜிபுர் ரஹ்மானை நியமித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கடலில் வெப்ப அலைகள் அதிகரிப்பு; பவளப்பாறைகள் அழியும் அபாயம்



தற்போது அதிகரித்துள்ள கடல் வெப்பநிலை மேலும் ஒரு மாத காலம் நீடித்தால் இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் உள்ள பவளப்பாறைகள் அழியும் அபாயம் ஏற்படும் என சமுத்திவிரவியல் விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இலட்சத்தீவு கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் பவளப்பாறைகள் அழியும் அபாயகரமான சூழல் பதிவாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக தேசிய நீர்வள ஆராய்ச்சி மேம்பாட்டு முகாமைத்துவத்திற்கு (நாரா) புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நாயகம் சமுத்திவிரவியல் விஞ்ஞானியான கலாநிதி.கே.அருளானந்தன் ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் -

கடலில் வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸாக அதிகரித்து இரண்டு வாரங்கள் நீடித்துள்ளது. நாட்டிலுள்ள பவளப்பாறைகளின் நிலை குறித்து நாரா எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை, ஆனால் பவளப்பாறைகள் நிறத்தை இழந்து அழிவடையும் என்பதை நிராகரிக்க முடியாது.

பவளபாறைகள் உருவாக கடலின் வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸ் வரை ஏற்ற இறக்கமாக இருக்க வேண்டும். தற்போதைய அதிகரித்த வெப்பநிலை இன்னும் ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் நீடித்தால் பவளபாறைகள் அழிவடைவதை எதிர்பார்க்கலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

கடல்நீரின் வெப்பம் வழக்கத்தை விட அதிகரிக்கும்போது பவளப்பாறைகள் தமது நிறத்தை இழந்து வெளுக்கத் தொடங்குகின்றன. இதன் மூலம் பவளப்பாறைகளின் அழிவைத் தெரிந்து கொள்ள முடியும். பவளப்பாறைகள் அழிந்தால் அதைச் சார்ந்து வாழும் மீன்கள் உள்ளிட்ட ஏராளமான கடல் உயிரினங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

## அம்பாறையில் டென்னிஸ் விளையாட்டரங்கு கிழக்கு ஆளுநர் செந்திலால் திறந்துவைப்பு









பொலிஸ் திணைக்களத்தின் உதவியுடன் டென்னிஸ் சங்கத்தால் பொது மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டரங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்துவைத்தார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் தமெந்த விஜயசிறி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாணவர்கள் டென்னிஸ் விளையாட்டில் தமது திறமைகளை வளர்த்துக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## இனவாத அரசுடன் அரச அதிகாரிகளும் சேர்ந்து மக்களை வெளியேற்ற முயற்சி

### தொடர் போராட்டம் வெடிக்கும் என ரவிகரன் எச்சரிக்கை

முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மக்களை மாவட்டத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு மாவட்டத்தின் அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறார்களா என்ற சந்தேகம் எங்களிடம் மேலோங்கியுள்ளது. இதற்கு எதிராக மாவட்ட செயலகத்திற்கு முன்பாக சட்டி பானையுடன் போராட வேண்டிய நிலையில் இருப்பதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தொரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகாவலி என்றால் தமிழர்களுக்கு மரணபொறி. காரணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2018 ஆண்டு மாவட்ட செயலக புள்ளிவிவரத்தின் படி 2,199 ஏக்கர் காணி 625 பயனாளிகளுக்கு என்று மகாவலியால் அபகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2024 ஆண்டு இது 4 ஆயிரம் ஏக்கராக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மகாவலியின் ஆக்கிரமிப்புக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கருவாட்டுகேணிநில் 6 கிராம அலுவலர் பிரிவுகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்த காணிகள் இலங்கை சுதந்திரமடைந்ததற்கு முன்பிருந்தே தமிழர்களுடைய பூர்விக காணி என்பதற்கு தெளிவான உறுதிகள் ஆவணங்கள் இருக்கின்றன. இது மட்டுமன்றி 1984 ஆண்டு உதியமலைபடுகொலை இடம்பெறுவதற்கு சில காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் நுழைந்துவிட்டார்கள் என கூறி இப்பகுதி மக்களை கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் துரத்தினார்கள். அன்று வெளியேறிய மக்கள் 29 வருடத்திற்கு பின்னரே மீள்குடியேறினார்கள் இந்த விரட்டியடுப்பால் விவசாய செய்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன. அந்த காலத்தில் இந்த நிலமானது இந்த மாவட்டத்திற்கு மட்டுமல்ல இலங்கை முழுவதற்குமே நெல் உற்பத்தியால் அரிசியை வழங்கி தன்னிறைவு கண்ட மாவட்டமாகும்.

இவ்வாறான நிலப்பரப்புகளை மகாவலி என்ற பெயரில் ஆக்கிரமித்து விட்டு தமிழர்களை விரட்ட நினைப்பது எத்தகைய நியாயம். ஆட்சிக்குவரும் இனவாத அரசாங்கங்கள்தான் இத்தகைய முயற்சியை மேற்கொள்கிறார்கள் என்றால் மாவட்டத்திற்கு பெறுப்பு கூறவேண்டிய மாவட்ட செயலர், பிரதேச செயலர் அவர்களும் இந்த இனவாத அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் மக்களை துரத்தும் செயல்பாட்டில் இருக்கிறார்களா? சொந்த மண்ணிலிருந்து அகற்ற நினைக்கும் செயற்பாட்டிற்கு நாம் ஒரு போதும் அஞ்சமாட்டோம். எதிர்வரும் நாள்களில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் சட்டிபானைகளுடன் தொடர்போராட்டத்தில் ஈடுபடவேண்டியவர்களாக உள்ளோம்.

எனவே மகாவலி திட்டத்தை கைவிட்டு தமிழ்மக்களின் காணிகளை தமிழ்மக்களிடம் கையளிக்கும் வேலைத்திட்டத்தை முன்னேடுக்க வேண்டும். - என்றார். (05)

## கட்டுகஸ்தோட்டையில்; நீரில் மூழ்கி ஒருவர் சாவு

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட வராதென்ன பகுதியில் மகாவலி கங்கையில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கண்டி, யடஹலகல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுநபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது நண்பருடன் மகாவலி கங்கையில் நீராடிக் கொண்டிருக்கும்போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் இளையோர் சாதிக்கட்டும்

**கடந்த சில ஆண்டுகளாகவே தமிழ் இளையோர் உலக அரங்கில் தமது திறமைகளை நிரூபித்து வருகின்றார்கள். கடந்த ஆண்டு கில்மிஷா, சரிகமப நிகழ்ச்சியில் வெற்றி பெற்று மகிழ்ச்சியைத் தேடித் தந்தார். இப்போது துடுப்பாட்ட வீரரான வியாஸ்காந் இந்திய பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தனது முதலாவது ஆட்டத்தில் களமிறங்கியிருக்கிறார். அதே நேரம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளம் பெண்கள் இலங்கையின் தேசிய கபடி அணிக்குத் தெரிவாகியிருக்கின்றனர்.**

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனான வியாஸ்காந் ஏற்கனவே பல ரி20 போட்டிகளில்ஆடியிருக்கின்றார். சர்வதேச ஆட்டத்திலும் இலங்கை அணி சார்பாகப் பங்கெடுத்திருக்கின்றார். இந்த ஆண்டு பன்னாட்டு லீக் ரி20 போட்டியில் மும்பை இந்தியன்ஸ்அணிக்காகவும்ஆடியிருக்கிறார். இலங்கை பிரிமியர் லீக் போட்டியில் ஜவ்னா ஸ்டாலியன்ஸ் அணிக்காகவும் ஆடியிருக்கின்றார்.**

**இருந்தாலும் ஐபிஎல் போன்ற அழுத்தம் தரும் போட்டி வடிவத்தில், உலகின் முதல் தர லீக் கிரிக்கெட் ஆட்டத்தில் விளையாடுவதென்பது மிகச் சிறப்பானது. அதுவும் இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் பலரும் ஐபிஎல் ஏலத்தில் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்ட நிலையில், ஹைதராபாத் சண் ரைசர்ஸ் அணிக்கு வலைப் பந்துவீச்சாளராகச் சென்று அந்த அணியின் விளையாடும் பதினொருவர் குழாத்தில் இடம்பிடித்திருக்கிறார் வியாஸ்காந்.**

**தமிழ் இளையோர் தமது திறமையை வளர்த்துக்கொண்டால் அவர்கள் இலங்கையையும் தாண்டி வாய்ப்புக்களைப் பெறமுடியும் என்பதற்கு வியாஸ்காந் ஒரு உதாரணம். அவரது வளர்ச்சியில் இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான குமார் சங்ககாரமற்றும்மகேலவின்பங்கைப்புறக்கணித்துவிட முடியாது. வடக்கில் இருந்தும் சிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கண்டறிய அவர்கள் மேற்கொண்ட நேர்மையான முயற்சியின் விளைபயன் வியாஸ்காந். இருப்பினும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு தன்னை சிறப்பான ஓரிடத்தில் இருத்திக்கொண்ட அவரது முன்மாதிரி தமிழ் இளையோருக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு.**

**அதுபோன்றே இலங்கையின் தேசிய கபடி அணிக்குத் தெரிவாகியிருக்கும் யாழ்ப்பாணத்தின் இரு இளம் பெண்களும்கூட தமிழ் இளைஞர்களுக்கான முன்மாதிரிகள். இலங்கைத் தேசிய பெண்கள் கபடி அணிக்கு யாழ். மாவட்டக் கபடிச் சங்கத்தைச் சேர்ந்த வீராங்கனைகளான இ.பிரியவர்ணா, வி.டிலக்ஷனா ஆகியோர் தெரிவாகியுள்ளனர். நேபாளத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய பெண்களுக்கான கபடிப் போட்டியில் விளையாடுவதற்கு இவர்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என இலங்கைத் தேசிய கபடி சம் மேளனம் அறிவித்துள்ளது. வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களும் மிளிரவேண்டும் என்று வாழ்த்துவோம்.**

**வியாஸ்காந்தைப் பாராட்டி விடுத்துள்ள செய்தியில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்திருப்பதைப்போன்று, "பல்வேறுபட்ட சமூகச் சீர்கேடான செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் இளைய தலைமுறையினருக்கு விளையாட்டின் மூலம் சாதனை படைக்கும் 22 வயதேயான வியாஸ்காந்த் ஒரு சிறந்த முன்னுதாரணமாவர். கற்றல் மூலம் மட்டுமல்ல விளையாட்டின் மூலமும் உயரங்களை எட்ட முடியும் என்பதை உணர்த்தியுள்ளார் வியாஸ்காந்."**

**தமிழ் இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்போம் அவர்கள் முன்னேறுவதற்கு.**

# மன்னிக்க முடியுமா?

## என். சத்திய மூர்த்தி

இனப்போர் முடிந்த 2009ஆம் ஆண்டு தொடங்கி, வருடாந்தம் மே 18 தினத்தை துக்க நாளாக தமிழர் அமைப்புகள் பலவும் அனுசரித்து வருகின்றன. ஆனால், அதனை தனித்தனியாக அனுசரிப்பதின் மூலம் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் சிவில் சமூத்தினரும், தங்களது ஒற்றுமையின்மையையே உலகிற்கு பறைச்சாற்றி வருகின்றனர். இதுவே, புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளின் வழிவகைகூட. ஆனால், இந்த வருடம் அவர்கள், குறிப்பாக உள்நாட்டில் வாழும் தமிழர் அமைப்புகள் என்ன செய்ய போகின்றன?

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் என்று நீட்டி முழக்கிய அவர்களில் எத்தனை பேர், கூட்டாக துக்க நாளை ஒரு சேர அனுஷ்டிக்கப் போகிறார்கள்? அவ்வாறு அவர்கள் கூட்டாக இந்த ஒரு விடயத்தில்கூட இருக்காவிட்டால், அவர்களாவது, பொது வேட்பாளரை களமிறக்குவதாவது!

அவ்வாறு பொது வேட்பாளர் என்று முடிவு செய்தால், முதல் சண்டையே, யார் அந்த பொது வேட்பாளர் என்பதில் தொடங்கும். தமிழ் வேட்பாளர் தோல்வி அடையப் போகிறார் என்று கருதும் சிலர், ஒரு கல் தூணை நிறுத்தினால், அதனால் தலைவர்களிடையே கௌரவ பிரச்சினை தோன்றி, பிரச்சினை பெரிதாகாமல் பார்த்துக்கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். ஆனால், வேறு சிலரோ, தமிழர்கள் பெரிதும் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தலைவரையோ, அவர்கள் அவ்வாறு போற்றும் ஒரு சமூதாய பிரமுகரையோ தேர்வு செய்ய வேண்டும் என்று கருதுகின்றனர். காரணம், அவர் தோல்வி அடைந்தாலும், தென்னிலங்கையிலும், சர்வதேசத்திலும் கேலிப்பொருளாக மாறிவிடக்கூடாது என்பது அவர்கள் கருத்து.

### தேர்தல் புறக்கணிப்பு

இந்தப் பிரச்சினைகளை மனதில் வைத்துத் தானோ என்னவோ, கஜன் பொன்னம்பலம் மட்டும், தேர்தல் புறக்கணிப்பு என்று தொடர்ந்து கூறி வந்திருக்கிறார். அவரை பொறுத்தவரையில், தமிழர்களின் ஒட்டு மொத்த தேர்தல் புறக்கணிப்பும், பொதுவேட்பாளருக்கேஅனைத்துதமிழ்வாக்குகளும் என்பதும் ஒரே இலக்கை அடைய இரு வேறு வழிகள். ஆனால், தேர்தல் புறக்கணிப்பு என்ற ஒரு ஒருமித்த கருத்து உருவானால், அதனை, 2005-ஆம் ஆண்டு விடுதலை புலிகள் அமைப்பு, துப்பாக்கி முனையில் அமல்படுத்தியது போல் அமைந்து விடுமோ, என்ற கவலையும் உருவாகிறது. காரணம், 2005இல், விடுதலை புலிகள் அமைப்பு, தேர்தலில் போட்டியிட்ட ஒரு தரப்பினரிடமிருந்து கணிசமான தொகை வாங்கிக்கொண்டே கட்டாய பகிஷ்கரிப்பை அமல்படுத்தியது என்ற குற்றச்சாட்டும் உண்டு.

பொது வேட்பாளர் யார் என்பது ஒரு புறமிருக்க, அவரது கொள்கை முடிவுகள் குறித்து அனைத்துத் தரப்பினரும் ஒருமித்த கருத்துக் கொள்வார்களா? சிலர், இன்னமும் தனி நாடு குறித்துப் பேசுவார்கள். வேறு சிலர், தமிழர்களின் உரிமைகள் என்று பேசுவார்கள். மற்றும் சிலர், மொழி மற்றும் கலாசார அடையாளம் முக்கியம் என்பார்கள்.

இவை அனைத்தையும் ஒன்றிணைத்து, ஒரு கொள்கை விளக்கத்தையும், ஒரு தேர்தல் கோஷத்தையும் உருவாக்குவது ஒன்றும் சிரமமான காரியம் இல்லை. ஆனால், ஒருவன் சொன்னதை மற்றவர்கள் கேட்க மாட்டார்கள் என்ற மனப்பான்மையில் செயல்படும், தமிழ் தலைவர்கள் இதில் மட்டும் விட்டுக்கொடுப்பார்களா, என்ன?

### ஒருங்கிணைக்கும் பாலம்

இன்றைய சூழலில் தமிழ் தலைவர்கள் உண்மையிலேயேஒருங்கிணையவேண்டுமானால், அவர்கள் அனைவரிடமும் உரிமையுடன் பேசும் ஒரு மத்தியஸ்தர் தேவை. உடல் நலம் சரியாக இருந்திருந்தால், சம்மந்தன் அந்த பொறுப்புக்கு ஏற்றவர். ஆனால், அவர் பிற அனைவருக்கும் மேலாக, அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் பாலமாக தன்னை வளர்த்துக் கொள்ளவில்லை.

மாறாக, தமிழ் தேசிய கூட்டமைப்பினுள் தமிழ் அரசு கட்சியின் மூத்த பிரதிநிதியாகவே தன்னை அவர் கண்டார். இன்று தமிழர் தரப்பு திசை தெரியாமல் தவிப்பதற்கு அவரும் ஒரு காரணம். அவரே முக்கிய காரணம் என்று கூறலாம்.

சம்மந்தனுக்கு முன், இந்த பொறுப்பு பிரபாரகனிடம் இருந்தது. சம்மந்தன் வாயால் சொன்னதை பிரபாகரனின் துப்பாக்கி செய்தது. தமிழர் எதிர்காலம் குறித்த இரண்டின் விளைவும் ஒன்றே. என்ன, பிரபாகரன் தலைமைத்துவம் நல்கிய இனப்போரில் தமிழ் சமூகமே அழிவை நோக்கி பயணித்தது என்பதே அப்பட்டமான உண்மை.

இவ்வாறுதான் போரின் முடிவு இருக்கும் என்பதை பிரபாகரன் உணர்ந்திருக்கவேண்டும். ஆனால், அவ்வாறான புரிதல் இருக்கவில்லை என்பதால், தமிழர் தலைமைக்கு ஏற்புடைமை பிரபாகரனுக்கு கிடையாது. ஆனால், அதனை முகத்தில் அடித்தால் போல் சொல்வதற்கு அண்மையில் யாரும் இருக்கவில்லை.

அதிலும் அன்றன் பாலசிங்கத்தையும் கட்டம் கட்டி லண்டனில் ஓரம் கட்டிய பின், பிரபாகரனை சுற்றி இருந்தவர்கள், அசைக்க முடியாத, தவறே செய்ய முடியாத ஒரு தலைவனை பார்த்தார்கள். தங்களில் ஒருவனை, தங்களை போலவே, தவறுகளும் செய்பவனை பார்க்கவில்லை. தமிழ் சமுதாயம் அனுபவித்து வரும் அவலங்களுக்கு இதுவும் ஒரு சாபக்கேடு.

### மனித கவசம்

பிரபாகரன் விட்ட பிழைகளின் மிக பெரிய பிழை, இனப்போருக்கான தலைமைத்துவம் அல்ல. மாறாக, விடுதலை புலிகள் அமைப்பின் 'மாவீரர்கள்' என்று பட்டம் சூட்டப்பட்டவர்களின் பெற்றோரையும் உறவினரையும் தனது பெற்றோர்கள் லெவலுக்கு உயர்த்தி, அவர்களை தன்னை காத்துக் கொள்ள ஒரு மனித கவசமாக கடைசி வரை பயன்படுத்திக்கொண்டதுதான், பிரபாகரனின் கொடுமைக்கும், கொடூரத்திற்கும் முக்கிய அத்தாட்சி.

இனப்போர் முடிவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே அந்த முடிவை கணக்கிட்டு, அதனையே எதிர்நோக்கி, அப்பாவி, அபலை தமிழ் பெற்றோரை மனித கவசமாக தன்னுடனேயே வைத்துக் கொண்டு, தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவர்களையும் அழைத்து சென்றதை எத்தனை தமிழர்கள் இன்று எண்ணிப்பார்க்கிறார்கள்?

அந்த விதத்தில், முள்ளிவாய்க்காலில் சுமார் மூன்று இலட்சம் அப்பாவி தமிழர்களை மனித கவசமாக பயன்படுத்த நினைத்ததை யாராவது மன்னிக்க முடியுமா? அதற்கு முன்னரும்கூட. தொண்ணூறுகளின் மத்தியில், யாழ் நகரம் இராணுவத்தினரின் கையில் விழுந்ததும், அங்கு வாழ்ந்து வந்த ஐந்தாறு இலட்சம் மக்களையும் தன்னுடன் வன்னி வனங்களுக்கு கட்டாயப்படுத்தி அழைத்து சென்றது அவர்களது பாதுகாப்பு கருதி மட்டும்தான் என்று யாராவது தமிழர்கள் இன்றளவும் நினைக்கிறார்களா?

பிரபாகரனின் புத்திகூர்மையும் குயுக்தியான முடிவுகளும் போர்தந்திரங்கள் என்றான பிறகு, இந்த மனித கேடயங்களை எல்லாம் கூட பெரிய இராணுவ முன்னெடுப்பாகவே காணப்பட்டன. ஆனால், அது மூன்றாம் தரமான, ஐந்தாம் தரமான கீழ்தரமான திட்டமிடல் என்பது எத்தனை பேருக்கு இப்பொழுதாவது புரிந்துள்ளது? எத்தனை கல்நெஞ்சம் இருந்திருந்தால், எத்தனை கொடூர மனம் படைத்திருந்தால், இவ்வாறெல்லாம் ஒரு மனிதன் எண்ண துணிவான்? செய்ய துணிவான்?

### உலக மகா அறிவாளிகள்

இன்றளவும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத ஒன்றாகவே இருக்கிறது என்பது என்னவோ உண்மை. அதனை போர் மூலமோ, அல்லது தீவிரவாத தாக்குதல் மூலமோ முடிவு கட்ட முடியும் என்று பிரபாகரன் நினைத்து செயல்பட்டது, வருத்தப்பட வேண்டிய விடயம். அத்தகைய பிராகரனின் எண்ணத்திற்கு தூபமிட்டு, தங்களை உலக மகா அறிவாளிகள் என்று கருதிக்கொள்ளும் யாழ்பாண அறிவுஜீவிகள் ஜால்ரா அடித்து, மனத்தளவிலும் கூட அடி பணிந்தது அதை விட முட்டாள்தனம்.

இனப்பிரச்சினையை காரணம் காட்டி, கடந்த சுமார் எழுபது ஆண்டுகளாக மேலை நாடுகளுக்கு பயணித்த மேதைகள் இப்போதும் எப்போதும், இங்கு திரும்பப்போவது இல்லை. அவர்களில் பலரும் மூன்றாவது மற்றும் நான்காவது தலைமுறையாக மேலை நாடுகளின் வாழ்பவர்கள். பிறர் இரண்டாவது தலைமுறையினடு அங்கு வாழ்ந்து வருகிறார்கள்.

இங்கு உண்மையிலேயே அமைதி திரும்பி, தமிழர்களுக்கான அனைத்து உரிமைகளும் கிடைத்திருந்தாலும், அவர்களில் ஒருவராவது தாய்நாடு திரும்பி வந்து இங்கேயே வாழ்ந்து விடப்போகிறார்களா என்ன? அவர்களுடைய வாழ்க்கை முறை மற்றும் வசதி வாய்ப்பு வேறு. இங்கு அவர்களால் வந்து நல்லூர் கோவிலுக்கு ஒரு நாள் சென்று வருவது, தொடர்ந்து மறந்து பட்ட உறவினர்களோடு ஒரு வாரம் பொழுது கழிப்பதற்கு அப்பால் எதுவும் செய்ய முடியாது. செய்யமாட்டார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

ஆனால், அவர்களோ,; அரண்மனைகளிலும், 100-மாடி கட்டிடங்களிலும் வாழ்ந்து கொண்டு, இங்குள்ளோர் எவ்வாறு போராட வேண்டும் என்று திட்டமிடுகிறார்கள். இங்குள்ள சில ஆமாம் சாமிகளுக்கு சில ரொட்டி துண்டுகளை வீசி, அதன் மூலம் தங்களது குற்ற உணர்ச்சிகளுக்கு எல்லாம் வடிகால் தேடிக் கொள்கிறார்கள்.

ஆனால், அவர்களுடைய ஆட்டத்திற்கு ஆடி வரும் இங்குள்ள தமிழ் தலைவர்கள், தாங்கள் ஏமாற்றப்படுவது கூட தெரியாமலே தங்களது காலத்தை கழித்து வருகிறார்கள். அவ்வாறு தெரிந்தாலும், அவர்களும் அந்த குற்ற உணர்ச்சி பரம்பரையினரின் பகடை காயாகவே மாறி விடுகிறார்கள். இவர்களா, உள் நாட்டில் தமிழர் உரிமையை மீட்டெடுத்து தரப் போகிறார்கள்?

# புத்தளம் வைத்தியசாலையின் உட்புற சுவர்கள் ஓவியங்களால் அழகுற்றது

(எம்.எச்.எம்.சியாஜ்)

நோயாளர்களாக வருகை தரும் சிறார்களின் மகிழ்ச்சியை கருத்தில் கொண்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையின் உட்புற சுவற்றில் அழகிய வர்ண ஓவியங்கள் வரைந்து வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் ஆதார வைத்தியசாலையின் சிறுவர் வார்ட்டுக்கு பொறுப்பான வைத்தியர் சுஜித் மற்றும் வைத்தியர் சனூசியா ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.



சமூக ஆர்வலர் முஹம்மட் சாமிலின் முயற்சியால் புத்தளம் வலய கல்வி பணிமனையின் சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி எம்.எம்.முஹம்மது மற்றும் அவரது மாணவர் அஷ்ஷெய்க் முஹம்மது ஜப்ரீஸ் ஆகியோரது ஒத்துழைப்போடும் புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ரனீஸ் பதியுதீனின் பங்குபற்றுதலோடும் இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. (05)



# கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபிர் பாலர் பாடசாலை சிறுவர் சந்தை









(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபிர் இஸ்லாமிய பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை இவ் வருடமும் பாடசாலையின் அதிபர் எம்.ஜே.என் பாஹிமா தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) பாடசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட உளவளத்துணை உத்தியோகத்தரும் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பாலர் பாடசாலைகளுக்கான பொறுப்பு உத்தியோகத்தருமான எச்.எம் நிப்ராஸ் , கற்பிட்டி புதுப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி மிக்தாத் மற்றும் கற்பிட்டியின் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான ஏ.ஆர். எம் முஸம்மில் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

சிறுவர்களின் அறிவு ஆற்றலை மேம்படுத்தி செயற்பாட்டுதிறன்மிக்கதாக கொண்டு வரும் நோக்கோடு வியாபாரம் மற்றும் பொருளாதாரம் ரீதியாக சிறார்களை செயற்பட தூண்டுதலை நோக்காக கொண்டு இச் சிறுவர் சந்தை வருடா வருடம் கற்பிட்டி ஜன்னத்துல் அஸாபிர் இஸ்லாமிய பாலர் பாடசாலையில் நடைபெற்று வருவதாகவும் இதற்கான பூரண ஒத்துழைப்புக்களைபெற்றோர்களுடன் இணைந்து எமது பாடசாலையின்ஆசிரியர்களான ஏ.சீயஸினத்பானு,எம்.ஐஆகிலா பானு, எம்.எப் இமாரா, எம்.ஏ.எப் ஹனா, எம்.ஆர்.எப் றபா ஆகியோர் வழங்கி வருகின்றதனையும் அதிபர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது .(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஆயுர்வேத மசாஜ் நிலையம் போர்வையில் விபசார விடுதி :

### 6 பெண்கள் கைது

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவிற்குறப்பட்ட பகுதி ஒன்றில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி நடத்தி வந்ததாகக் கூறப்படும் 6 பெண்கள் கல்கிஸ்ஸை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர்களுக்குக் கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை, எல்பிட்டிய, நிட்டம்புவ, கெட்டபுலாவ மற்றும் பொலன்னறுவைஆகியபகுதிகளைச் சேர்ந்த 25, 27, 32, 34 மற்றும் 37 வயதுடைய 6 பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யாழ். சாவகச்சேரி பகுதியில் விசேட யுக்திய நடவடிக்கை





யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை யுக்திய சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து ஏ-9 மற்றும் ஏ32 வீதிகளூடாக பயணித்த வாகனங்களை சோதனையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ்மா அதிபர் தேசப்பந்து தென்னக்கோன் அவர்களது ஆலோசனைக்கு அமைவாக போதைப்பொருளைகட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் யுக்திய சுற்றிவளைப்புநடவடிக்கை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கற்பிட்டியில் இடம்பெற்ற இரசாயனமற்ற ஊட்டச்சத்து உணவு பற்றிய செயலமர்வு







(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஊட்டச்சத்து உணவுக்கான பல் துறை செயற்திட்டம் சம்பந்தமான செயலமர்வு நேற்று கற்பிட்டி பிரதேச செயலாளர் சமில இந்திக ஜயசிங்க தலைமையில் புத்தளம் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இரசாயன ஊட்டச்சத்து இல்லாமல் போஷாக்கான உணவுத் திட்டமிடலை மேற்கொள்ளல் என்ற தொனிப்பொருளில் இரசாயன உரப்பாவனை மற்றும் கிருமிநாசினிகளின்பாவனைகள்என்பவற்றைதவிர்த்து சுகாதாரமான இடம்பெற்ற இச் செயலமர்வினை புத்தளம் மாவட்ட திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் கீத் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மதுவந்தி மற்றும் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி தர்மசிறி ஆகியோர் வழிநடத்தினர் .

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், கற்பிட்டி பிரதேச சபையின் வெளிக்கள ஊழியர்கள், வங்கி ஊழியர்கள், கற்பிட்டி கோட்டக் கல்வி பணிமனை ஊழியர்கள், வெளிக்கள நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அரச ஊழியர்கள், சமூக சேவை தொண்டு நிறுவன தொண்டர்கள் மற்றும் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் என பலரும் கலந்து கொணடதுடன் இச் செயலமர்விற்கான நிதி உதவியினை சர்வோதய அமைப்பு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கில் களைகட்டும் கண்ணகை அம்மன் சடங்கு



வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல்லாம் பறையொலி முழங்க குழல்நய ஓசையெழுப்ப வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமை.



கிழக்கில் பெரும்பாலான தமிழ்க்கிராமங்கள் பாரம்பரிய இச்சடங்கினால் களைகட்டும்.

கிழக்கில் பெரும்பாலான கண்ணகி ஆலயங்களில் எதிர்வரும் 13 ஆம் தேதி திங்கட்கிழமை இச் சடங்கு ஆரம்பமாகிறது.

வடக்கில் வற்றாப்பளை கண்ணகை அம்மனாலயத்திலும் இச்சடங்கு சிறப்பாக பாக்கு தெண்டலுடன் ஆரம்பமாகியிருக்கிறது.

பூம்புகாரைத் தலைநகராகக்கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டியநாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள் சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித்தெய்யோ என இன்றும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர் சிங்களவர்)வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப்பட்டுவந்தது.



கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத்தெய்வமாக உருப்பெற்ற கதையை சிலப்பதிகாரம் சுவைபடக் கூறுகிறது.

வானோர் வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக்



கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றினார்கள்.

சிறு குடியீரே சிறு குடியீரே ....என்ற சிலப்பதிகார குன்றக்குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும்.அதனையொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்கிற்குவந்தது.



சேரன்செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்துவந்துகங்கையில்நீராட்டிஅக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சிமாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்தான்.அங்கு இந்திரவிழா எடுத்தான்.

இந்த விழாவிற்கு குடகக்கொங்கரும் மாளுவ வேந்தனும் கடல்சூழிலங்கை கயவாகு வேந்தனும் வந்திருந்ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது.இச் சிலப்பதிகாரத்தையும் பழைய ஏடுகளையும் வைத்து கிழக்கில்பலகாப்பியங்களும்நூல்களும்வெளிவந்தன

கண்டிஅரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் (1629-1637) பாடப்பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில்30கண்ணகைஅம்மன்ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூராகக் குறிப்படப்பட்டு;ள்ளது.எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

**'பட்டிநகர்தம்பிலுவில்வீரமுனை காரைநகர்**
**பவுசுபெறுகல்முனைகல்லாறெருவில்மகிளூர்**
**செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு**
**செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா**
**அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்**
**மட்டவிழ்பூங்குழல்மண்முனைக்கண்ணகையை**
**மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே.'**

என ஊர்சுற்றுக்காவியம் கூறுகிறது.

2024 ஆம் ஆண்டுக்கான இப் பாரம்பரிய சடங்கு கண்ணகித் தாயின் அருளால் சிறப்பாக அமைய பிரார்த்திக்கின்றோம்.(05)

# எமது தமிழ் அரசியல்வாதிகள் மண்ணுக்காக வாய்திறவுங்கள்

## முல்லை சிங்கள பூமியாகுகிறது




தமிழ் அரசியல்வாதிகள் எமது மண்ணைக காப்பாற் றவாவது நாடாளுமன்றத்தில் வாய் திறந்து பேச வேண்டும் என முல்லைத்தீவு தீவு மாதர் சங்க தலைவி சு.கங்கம்மா வேண்டுகோள் விடுத்தார்.

வட மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் இடம் பெற்ற போராட் டத்தின்போதுஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் -

முல்லைத்தீவு மாவட்டம் மகாவலி என்ற போர்வையில் தமிழ்மக்களின்பூர்வீகநிலங்கள் சிங்களவர்களுக்குத் தாரை வார்த்துக்கொடுக்கப்படுகிறது.

கொக்குதொடுவாயில் 3 கிராமங்கள் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட நிலையில் குறித்த பிரதேசம் பரந்துபட்ட வயல் காணிகளைக் கொண்ட பிரதேசம் 1984 ஆம் ஆண்டு சிங்கள அரசாங்கம் திட்ட மிட்ட முறையில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு மூன்று நாள்களில் உங்களை மீண்டும் குறித்த பகுதியில் அனுமதிக்கிறோம் என்றனர்.

ஆனால்முப்பதுவருடங்கள் ஆகியும் குறித்த பகுதிக்குச் செல்வதற்காகநாம்காத்திருந்த நிலையில் விடுவிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்த நிலையில் எமது காணிகள் எமக்கு ஒப்படைக்கப்படவில்லை.

மேற்படி பகுதி விவசாய காணிகளைக் கொண்டதாகக் காணப்படும் நிலையில் எமது மக்கள் அங்கு விவசாயத்தில் ஈடுபடுவதற்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

அங்கு வாழ்ந்த மக்களுக்கு மீன்பிடி என்றால் என்னவென தெரியாத நிலையிலும் வேறு வழியின்றி சிறு மீன்பிடியை நம்பியே தற் போது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தும் துர்ப் பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது ஆமையன் குளத்தில் மூன்று ஏக்கர் காணி தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் சம்பத் நுகர நன்றாகத் திட்டத்தின்மூலம்அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களான தண்ணி முறிப்பு மதுரமடு மேல் மானாவாரி காணி களையும் சிங்கள மக்களுக்குப் பிடித்துக் கொடுத்துவிட்டனர்.

சிங்கள அரசாங்கம் மனசாட்சிஇல்லாதஓர்அரசாங் கம். சிங்கள மக்களுக்குத் தமிழ் மக்களின் காணிகளைப் பிடித்துக் கொடுக்க முடியும் என்றால்ஒருபகுதியை ஏனும் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற மனோநிலை வர வில்லை.

ஆகவே தமிழ அரசியல் வாதிகள் இனியாவது உங்கள் வாய்களைநாடாளுமன்றத்தில் திறவுங்கள். முல்லை சிங்கள பூமியாக மாற்று வதை தடுத்து நிறுத்துங்கள்என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட இதய நோய் சத்திர சிகிச்சை இயந்திரம் எங்கே?

## எச்.எம்.எம்.ஹரீஸ் கேள்வி

(நூருல் ஹுதா உமர்)

கிழக்குமாகாணமக்களின்நன்மைகருதிமட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட இதய நோய் சத்திர சிகிச்சை இயந்திரம் வேறு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு கண்டனம் வெளியிட்டதிகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, ஸ்ரீ.ல.மு.கா. பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மட்டக்களப்பு சத்திய சாயி பாபா வைத்தியசாலைக்கு பாராட்டுகளும், நன்றியும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

கிழக்கு மாகாணத்தில் இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டுகிழக்கு மாகாணத்தில் அதிக நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கி வரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கடந்த காலங்களில் இதய சத்திர சிகிச்சை செய்வதற்கான இதய நோய் சத்திர சிகிச்சை இயந்திரம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், துரதிஷ்டவசமாக அன்றிருந்த சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவால் வேறு ஒரு மாவட்டத்திற்கு இடமாற்றியதால் கிழக்கு மாகாணத்தில் இருதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சத்திய சாயி பாபா வைத்தியசாலை ஆயிரத் திற்கும் மேற்பட்டவர்களுக்கு இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக எவ்வித கட்டணங் களும் இன்றி சிகிச்சை வழங்கிவருவது பாராட்டத்தக்கது. அந்த சத்திய சாயி பாபா வைத்தியசாலை நிர்வாகிகள், வைத்தியர்கள், ஊழியர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். - என்றார்.(05)

# ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக நேற்று திரவியராஜ் நியமனம் பெற்றார்

(வி.ரி.சகாதேவராஜா)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரி இராசரத்தினம் திரவியராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று (வியாழக் கிழமை) தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

திரவியராஜ் முன்னதாக வெல்லாவெளி நிந்தவூர் அம்பாறை போன்ற பிரதேசங்களில் கடமையாற்றி பொத்துவில் பிரதேச செயலா ளராக அருஞ்சேவையாற்றி இருந்தார்.

அதன் பின்னர் ஆட் பதிவு திணைக்கள பிரதி ஆணையாளராக கிழக்கில் பணியாற்றி வந்த வேளையில், தற்போது ஆலைய டிவேம்பு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த முற்போக்கு சிந்தனையுடன் சிறந்த சமுகசேவையுமாற்றி வந்த மண்ணின்மைந்தனான அவரை ஆலையடிவேம்பு சமூகம் பெரிதும் வரவேற்றுள்ளது. (05)




# வளவகோன் பாவை மங்கையற் கரசியார் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் ... ஆஸ்திரேலியா**

பாண்டிய மன்னன் பரமனை மறந்தான்
பூண்டிடு வினையால் சமணம் புகுந்தான்
சைவத்தை இகழ்ந்திடு சமணச் சிந்தனை
உள்ளம் இருத்தினான் உவகை எய்தினான்

ஆட்சியில் சமணம் அரசபை சமணம்
நோக்கிடும் இடமெலாம் சமண மடங்கள்
காற்றிலே சமணம் காவிலும் சமணம்
நாட்டிலே சமணம் விரிந்துமே நின்றது

பெண்ணை அழகை சமணம் வெறுத்தது
கல்லும் கனியும் இசையை வெறுத்தது
அறத்தை முதலாய் ஆக்கியே நின்றது
அறந்தான் நெறியென சமணம் அறைந்தது

இறுக்கம் இறுக்கமாய் தத்துவம் சொன்னது
இயல்புடை வாழ்க்கையை இகழ்ந்தே நின்றது
இல்லறம் என்பதை ஏற்றிட மறுத்தது
எல்லாம் வெறுமை ஆக்கிட முயன்றது

இயல்புடை வாழ்க்கையை ஏற்றிட மறுத்தது
இன்பம் என்பதை மறுத்தே நின்றது
ஆடல் பாடல் அறத்துக்கு எதிரியே
என்றே சமணம் எழுந்தே உரைத்தது

உலக வாழ்க்கையை ரசித்திட மறுத்தது
உலக இன்பங்கள் துன்பமே என்றது
கூடுதல் ஆடுதல் பாடுதல் யாவுமே
கேடினை நல்கிடும் என்றே மொழிந்தது

பாண்டியன் மனையாள் சோழத்தின் கொழுந்து
நீண்டநல் பக்தி நெஞ்செலாம் சிவனே
சைவ நெறியினை தந்நுயிர் ஆக்கிய
மாண்புடை மங்கையாய் வளர்ந்துமே இருந்தார்

மங்கல நாணைப் பூட்டிய மன்னவன்
தன்கருத் துணரா நடப்பதை எண்ணி
கலங்கினாள் தினமும் கணவன் திருந்திட
வேண்டினாள் வேண்டினாள் சிவனை வேண்டினாள்
அரசபை அமர்ந்தார் அத்தனை பேரும்

சைவம் ஒதுக்குச் சமணம் சேர்த்தவர்
அச்சபை அமைச்சராய் ஒருவர் விளங்கினார்
அவரே சைவத்தை அணைத்தார் அகத்தினில்

சைவக் குலத்தைக் காத்திட வந்ததால்
குலச்சிறை என்னும் பெயரே வாய்த்தது
குலத்துக் கேற்ற குணத்துடை அமைச்சராய்
நிலத்திடை மதிக்க நின்றார் அமைச்சராய்

மன்னவன் மனையாள் மங்கையற் கரசி
உள்ளமோ சைவத்தை எண்ணியே நின்றது
மன்னவன் மனத்தை மாற்றியே மங்கை
சைவத்தை அகத்தில் அமர்த்திட நினைத்தாள்

அமைச்சராம் குலச்சிறை அரசிக்குத் துணையாய்
அரசனை மாற்றிட அருந்துணை ஆகினார்
காலம் கனிந்தது ஞானம் மிகுந்தநல்
சீலம் நிறைந்திடு சம்பந்தர் வந்தனர்

சம்பந்தப் பெருமான் வந்தநல் சேதியை
அமைச்சராம் குலச்சிறை அரசிக்குச் சொன்னார்
அழவிலா ஆனந்தம் அடைந்தாள் அரசியும்
ஆலவாய் அண்ணலை போற்றியே நின்றாள்

சம்பந்தர் வருகையை சமணர்கள் வெறுத்தனர்
சமணத் தலைமைகள் அரசனை அணுகினர்
அரசன் மனத்தில் அவலம் நிறைந்தது
அரசியோ அவனை ஆறுதல் படுத்தினாள்

அமைச்சரும் அரசியும் ஆளுடைப் பிள்ளையை
முறையாய் வணங்கி அமைவிடம் நல்கினர்
வளவகோன் பாவை மங்கையற் கரசியை
மாஞானி சம்பந்தர் வாழ்த்தியே மகிழ்ந்தார்

சம்பந்தப் பெருமான் தங்கிய இடத்துக்கு
வம்பராம் சமணர் தீயினை இட்டார்
இட்ட தீயது இடரினை விளைக்கா
சமணம் சார்ந்திட்ட அரசனைப் பிடித்தது

தீயது வெப்பு நோயாய் மாறியே
அரசனை வதைத்து ஆக்கினை கொடுத்தது
சமணத் தலைமகள் மந்திரம் மாயங்கள்
எதுவும் அரசனின் வேதனை போக்கில



மங்கையில் நல்லாள் மங்கையற் கரசி
வேண்டுதல் ஏற்றிட மன்னவன் இணங்கினான்
குழந்தை ஞானி சம்பந்தப் பெருமான்
அரசனின் நோயினை அகற்றிட வந்தார்

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
சம்பந்தப் பெருமான் உருகிப் பாடினார்
ஒட்டிய நோயே ஓடியே பறந்தது

சமணர்கள் வெருண்டார் வெகுண்டார்
தோற்றதை ஏற்கா தொடர்ந்தார் பிணைக்கினை
அனலிடை வாதம் புனலிடை வாதம்
அத்தனை செய்தும் அடங்கியே போனார்

அரசன் விழித்தான் அடக்கினான் சமணரை
அரசன் அகத்தில் அமைதி அமர்ந்தது
சைவம் எழுந்தது சம்பந்தர் மகிழ்ந்தார்
மனநிறை வுற்றார் மங்கையற் கரசியார்

பாண்டி நாட்டிலே பாங்காய்ச் சைவம்
ஊன்றிட உழைத்தார் உத்தமி பத்தினி
ஆண்டவன் அருளால் சம்பந்தர் இணைந்தார்
அனைவரும் போற்றிட அரசியும் திகழ்ந்தாள்

அரசமா தேவி மங்கையற் கரசி
அருளுடை அடியார் வரிசையில் இணைந்தார்
மாதவ சம்பந்தர் வாழ்த்தினைப் பெற்றார்
வளவகோன் பாவை மங்கையற் கரசியார்

---

# நன்றி

இறைவன் நம்மைப் படைத்தது மட்டுமல்லாமல் நமக்கு உயிரையும் கொடுத்து உயிர் வாழத் தேவையான பல்வேறு பொருள்களையும் அளித்துள்ளான். அவனது அருளாளே நாம் இன்னொரு நாள் வாழ்வதற்காக ஒவ்வொருநாள் அதிகாலையிலும் விழித்தெழுகின்றோம். இப்பூவுலகில் நாம் வாழ்வது ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாகும். ஏனெனில் இந்தப் பூவுலக வாழ்க்கையில் மட்டுமே நாம் ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபட்டு, இப்பிறவியின் பயனை அடைய முடியும். யாராவது ஒருவர் நமக்கு எவ்வகையிலாவது உதவும்போது, நமக்கு அவரிடம் நன்றியுணர்வு ஏற்படுகின்றது. ஆனால், நாம் வாழத் தேவையான பல வகையான பொருட்களை நமக்கு வழங்கும் இறைவனுக்கு நாம் நமது நன்றியைச் செலுத்துவதில்லை. நமக்கு அளித்துள்ள அபரிமிதமான செல்வங்களுக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துவதே ஆன்மீகப்பயிற்சியில்'க்ருதக்ஞதா'என்றுசொல்லப்படுகின்றது. இம்மாதிரி இறைவனிடம் எப்போதும் நன்றியுணர்வுடன் இருப்பது என்பது, ஒரு ஸாதகருடைய ஆன்மீகப் பயணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் ஆகும்.

உண்மை என்னவென்றால், பொதுவாக மக்கள் தங்களைப்படைத்தவன்இறைவன்எனஒப்புக்கொண்டாலும். இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டிய தேவையை உணர்வதில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடக்கும் நல்ல அல்லது கெட்ட சம்பவங்கள், முக்கியமாக, சாதாரண அன்றாட நிகழ்ச்சிகள் யாவும் தானே நடக்கின்றன என எண்ணுவதுதான். ஏதாவது அசாதாரண நிகழ்ச்சி நடந்தால், உதாரணத்திற்கு, ஒருவரது குழந்தை குணமாக முடியாத வியாதியால் பிடிக்கப்பட்டு, அவரது தீவிரமான ஆழ்ந்த பிரார்த்தனையால் அற்புதம் போல் அவரது குழந்தை அந்த வியாதியிலிருந்து மீண்டு வருவது போன்ற நிகழ்ச்சிகள் நடந்தால் மட்டுமே, அவருக்கு இறைவனுக்கு நன்றி செலுத்தத் தோன்றுகின்றது. ஆனால் இறைவன் இதுபோல் அற்புதமாய் அவருக்கு உதவியதும் நாளடைவில் அவரது மனதில் இருந்து மறைந்து, பழைய நிலைக்கேதிரும்பிவிடுகிறார். மீண்டும் அவரது வாழ்க்கையில் தாங்க முடியாத ஒரு கஷ்டம் வரும்போதுதான், அவருக்கு மீண்டும் இறைவனின் நினைவுவந்து, அவரது உதவி வேண்டி பிரார்த்தனை செய்யத் தோன்றுகின்றது.

தற்காலத்தில்நாம்ஆன்மீகமுன்னேற்றத்தில்கீழ்நிலையில் உள்ளபோது, 65% நிகழ்ச்சிகள் நமது விதிப்படியும், 35% நிகழ்ச்சிகள் நம்முடைய தன்னிச்சையான செயல்களாலும் நடக்கின்றன. ஆன்மீகத்தில் முன்னேறும்போது, நாம் இறைவனின் இருப்பை நம் வாழ்வில் உணர ஆரம்பிக்கின்றோம். இந்நிலையில், இறைவனின் விருப்பப்படியே நமது வாழ்வில் எல்லாம் நடக்கின்றது என்பதை உணர்ந்து அவரது அருளை அனுபவபூர்வமாக உணர்கின்றோம். ஒருவர் 60% ஆன்மீக நிலையை அடைந்த பின்னரே, அவரால் இதை உண்மையில் உணர்ந்து, நன்றி பாராட்ட முடிகின்றது. இந்த அனுபவத்துடன் உண்மையான அர்த்தத்தில், நன்றியுணர்வு வருகின்றது.

வார்த்தைகளால் மட்டும் நன்றி தெரிவிப்பது மேலோட்டமானநன்றியுணர்வுஆகும். ஆன்மீகப்பயிற்சியின் ஆரம்ப நிலையில், ஒரு ஸாதகர் இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்கக்கூட வார்த்தைகளைத் தேடவேண்டியிருக்கும். இருந்தா-லும் நாம் ஆன்மீக முன்னேற்றம் அடைய, இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் பழக்கத்தை நமக்குள் ஏற்படுத்திக்கொள்ள முயல வேண்டியது அவசியம்.

ஆரம்ப நிலையில் நாம் நம் வாழ்வில் இறைவனின் குறுக்கீட்டைத் தெளிவாக உணரும்போது, நமது இதய ஆழத்திலிருந்துநன்றியுணர்வுவெளிப்படும். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நம் அன்புக்குரிய நபர் இறைவனின் கருனையினால் காப்பாற்றப்படும்போது அல்லது நீண்ட நாட்களாக நாம் சந்தித்துக்கொண்டிருக்கும் ஒரு பிரச்சினை கடவுளின் கருணையால் எதிர்பாராதவிதமாக திடீரென்று தீரும்போது நாம் இவ்வாறு கடவுளுக்கு நம் இதயம் கனிந்த நன்றி உணர்வைத் தெரிவிக்கின்றோம். மற்றப் பல சமயங்களில், நம் வாழ்வில் உள்ள பலவற்றுக்கும் மற்றும் நம் வாழ்வுக்குமே, நாம் உதட்டளவிலேயே அல்லது புத்தி அளவில்தான் நம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆன்மீக பயிற்சியில் நாம் மேலும் மேலும் ஆழமாக மூழ்கும்போது அதுவரை நமக்குத் தெரியாது மறைந்திருந்த புது உலகம் நம் கண் முன்னே தோன்ற ஆரம்பிக்கின்றது. நமக்கு ஆன்மீக அனுபவங்கள் ஏற்படுகின்றன. இந்த ஆன்மீக அனுபவங்கள் மூலம் இறைவன் நம்முடன் பேசுகிறார். சின்னச் சின்ன சந்தோஷமான தற்செயலான நிகழ்வுகள் மூலம் நாம் மெதுவாக, ஆனால் நிச்சயமாக இறைவனின் வழிகாட்டுதலை நமது வாழ்வில் உணரத் தொடங்குகின்றோம். நம் வாழ்வில் நடக்கும் சிறிய நிகழ்வுகளுக்காகவும் நமது ஆன்மீகப் பயிற்சியில் தொடர்ச்சியாக இறைவனிடமிருந்து ஊக்கமும் உதவியும் கிடைப்பதற்காகவும் நம் நன்றியுணர்வு வளர்கின்றது. நாள் முழுவதும் தொடர்ச்சியாக நன்றியை உணர்ந்து, அந்த நன்றியுணர்வை வெளிப்படுத்துவதன் மூலம் ஒருவர் ஆன்மீக உணர்வுபூர்வமான நன்றியுணர்வை மெதுமெதுவாகவளர்த்துக்கொள்கின்றார். இந்தக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல், ஒரு செயலைத் தொடங்கும் முன்பும் செய்யும் போதும் செய்து முடித்த பின்பும் 'எல்லாம் கடவுளின் விருப்பப்படி நடக்கின்றது, எல்லாவற்றையும் அவரே செய்து முடிக்கிறார்', என்ற உணர்வு ஸாதகர்களிடம் தொடர்ந்து இருக்கிறது. எனவே, அவரிடம் நன்றியுணர்வு எப்போதும் இருப்பதனால் அது இயல்வாக, இதயபூர்வமான நன்றியாக வெளிப்படுகின்றது. எனவே இந்த நிலையில் ஸாதகரின் ஒவ்வொ-ரு செயலி-லும் அசைவிலும் எண்ணத்திலும் அவரது நன்றியுணர்வு பிரதிபலிக்கின்றது.

இந்த அடுத்தகட்ட ஆன்மீக நிலை, ஒருவரின் அகம்பாவம் குறையும்போது விழிப்படைகின்றது. இந்நிலையை அடைந்த பின்னர், அவரின் அகம்பாவம் குறைந்த நிலையிலேயே இருக்கும். உண்மையில், ஆன்மீக உணர்வுபூர்வமான நன்றியுணர்வு, குருவின் அருளால் செயல்படத் தொடங்குவதால், அது நிலையாக இருக்கின்றது.

**வேலம்புராசன் விதுஜா**

காலைக்கதிர் Kalaikkathir

# நூற்றுக்கு மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் புதுக்குடியிருப்பில் பொலிஸாரினால் மீட்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலைபகுதியில் தனியார் காணி ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல லட்சம் பெறுமதியான நூறுக்கும் மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் முல்லைத்தீவு பொலிஸாரால் புதன்கிழமை கைப்பற்றப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தனபாலவுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஸ்ர பிரதி பொலிஸ் மா அதிபரால் முல்லைத்தீவு பிரதான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்ட உத்தரவின்



புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல் இடம்பெற்று வருவதாக தொடர்ச்சியாக மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றார்கள். வனவள திணைக்களம், பொலிஸார் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் ஆதரவுடனே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் இதனால் இவர்களது சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக யாரும் நடவடிக்கை எடுப்பதில்லை என தொடர்ச்சியாக மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.

இவ்வாறான நிலையில் இரணைப்பாலை பகுதியில் பாரியளவில் மரக்குற்றிகள் கொண்டுவந்து பதுக்கி வைத்திருப்பதாக புதன்கிமை மாலை புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதும் பொலிஸார் சட்டநடவடிக்கை எடுக்காது அலட்சிய போக்குடன் செயற்பட்டதால்

பெயரில் முல்லைத்தீவிலிருந்து வருகைதந்த விசேட பொலிஸ் அணியினரின் நடத்திய சோதனையில் தனியார் காணி ஒன்றில் சுமார் 100 இற்கு மேற்பட்ட அண்ணளவாக 50 லட்சத்திற்கும் அதிக பெறுமதியுடைய முதிரை மரக்குற்றிகள் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுவருவதுடன் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரச அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு வனவளங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்து நிற்கின்றனர். (05)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் எல்பிட்டியவில் இளைஞர் சாவு

எல்பிட்டிய, அவித்தாவ பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

கஹதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவித்தாவயிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# ரூ. 2 கோடி பெறுமதியான குஷ் போதைப் பொருள் மாட்டியது

## விமான நிலையத்தில் இளைஞரும் கைது

05 கிலோவுக்கும் அதிகமான குஷ் போதைப் பொருளுடன் தாய்லாந்தில் இருந்து நாட்டிற்கு வருகை தந்த இளைஞரொருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார். 21 வயதுடைய ஹோமாகமவைச் சேர்ந்த தொழில்முறை நடனக் கலைஞரான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, இந்த சந்தேக நபர் தனது பயணப் பையில் மிகவும் சூட்சுமமானமுறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 05 கிலோகிராம் 278 கிராம் குஷ் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

36 தனித்தனி பொதிகளில் பொதி செய்யப்பட்ட இந்த குஷ் கஞ்சா 2 கோடி ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தாய்லாந்தின் பேங்கொக்கிலிருந்து ஶ்ரீலங்கன் ஏசியா விமானம் மூலம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு புதன்கிழமை இரவு 10.40 மணியளவில் வந்தடைந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# சுகாதார நிலையம் மூதூரில் திறப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பெரிய பாலம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிராமிய சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டது .

குறித்த நிகழ்வு நேற்று (வியாழக் கிழமை)இடம் பெற்றதுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இப் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவா தலைமையில் இடம்பெற்ற இந்த



நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள உட்பட மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் டி.ஜி.எம்.கொஸ்தா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# திருமலையில் 11 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தொழில் செய்யத் தேவையான கருவிகள் வழங்கி வைப்பு




திருகோணமலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானத்தை பெற்றுத்தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் 11 குடும்பங்களுக்கும் தலா ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரக் குழாய்கள் மற்றும் தூவல் நீர்ப்பாசனக் கருவிகளை ஒரு மாத காலப்பகுதியில் மூன்றாவது முறையாக புதன்கிழமை வழங்கியது.

இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் திருகோணமலையில் வழங்கிவைத்தார்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அன்றாட ஜீவனோபாயத்துக்கான ஓர் ஊக்குவிப்பாக இத்தொழில் வாய்ப்புகள் காணப்படுகின்றன. (05)

# 2 லட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றத்தில் இரண்டு பொலிஸார் உட்பட மூவர் கைது

2 லட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட மூவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.(05)

# திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன குறைபாடுகள் குறித்து தௌபீக் எம்.பி. ஆய்வு.



(எஸ். சினீஸ் கான்)

திருகோணமலை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் நிலவுகின்ற குறைபாடுகள் சம்மந்தமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர் நாயகம் எச்.அதாவுட செனவிரத்னவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது திருகோணமலை தொழிநுடபக்;கல்லூரியில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.(05)

## நிந்தவூர் ப்ளு மவுண்டன் அணி சம்பியன்ஸ் ஆனது





(எஸ்.அஷ்ரப்கான்)

நிந்தவூர் 'ப்ளு மவுண்டன் சம்பியன்ஸ் கிண்ணம்-2024 ' இன்சம்பியனாக'ப்ளுமெவுண்டன் ' அணி தெரிவானது.

'ப்ளு மவுண்டன் சம்பியன்ஸ் கிண்ணம்-2024' இன்மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி இண்டு நாள்கள் போட்டியாக நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த போட்டியில் நிந்தவூர் கல்முனை, பாலமுனை, சாய்ந் தமருது, சம்மாந்துறை, அக்கரைப் பற்று, ஆகிய 24 அணிகள் பங்குபற்றின.

இச்சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்திற்கு நிந்தவூர் 'ப்ளு மவுண்டன் 'அணியினை எதிர்த்து நிந்தவூர் அட்வென்சர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் சம்பியன் கிண்ணத் தையும், 20 ஆயிரம் பணப்பரிசை யும் ப்ளு மெவுண்டன் தனதாக்கி கொண்டது. இரண்டாம் இடத்தை தனதாக்கிய நிந்தவூர் அட்வென்சர் விளையாட்டுக் கழகத்தினருக்கு 10 ஆயிரம் பணப்பரிசும், கேடயமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சுற்றுப் போட்டியில் தொடர் ஆட்ட நாயகனாக புளு மவுண்டன் அணியின் நஜாத், சிறந்த துடுப்பாட்ட வீரராக அட்வென்சர் அணியின் வாபீக், சிறந்த பந்துவீச்சாளாக புளு மவுண்டன் அணியின் நபீர், இறுதி போட்டியின் ஆட்ட நாயகனாக பிர்னாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாகஅட்வென்சர்விளையாட்டு கழகத்தின் தலைவர் எம்.முஹாஜிர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தார்.

மேலும் புளு மவுண்டன் கழகத்தின் தலைவர் எம். சம்சுன் அலி, சுலைமான் பாரி, அட்வென்சர்விளையாட்டுகழகத்தின் முகாமையாளர்

மர்சூக், சோஷியல் டிவி பணிப் பாளர் என்.எம் சிராஜ், ஸ்போர்ட்ஸ் மீடியா தலைவர் வை.சியான், இசாக், புளு மவுண்டன் கழகத்தின் செயலாளர் சாக்கீர், பொருளாளர் சமீம், நிகாப், சப்ரி நௌசாட் , இம்சாத், ஆசிக் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

## மல்லிகைத்தீவில் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர், மல்லிகைத்தீவு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிருவாகத் தெரிவும் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிக்கு பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறும்.

இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் இக் கூட்டத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் நடமாட்டம் பகல்நேரம் குறைவு அம்பாறை மாவட்டத்தில் அதிக வெப்பம்



(பாறுக் ஷிஹான்)

கடும் உஷ்ணம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பொதுமக்களின் நடமாட்டம்பகல்வேளையில்குறைவடைந்துள்ளதுடன் இரவு வேளை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அடிக்கடி ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சீரற்ற இயல்பு நிலையுடன் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை, மத்தியமுகாம், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உணவகங்கள், திறக்கப்பட்டுள்ளதால் அதிகளவான நீர் வாய்க்கால் ஊடாக வெளியேறுகின்றது. இவ்வாறு வெளியேறும் நீரில அதிகளவான மக்கள் வெப்பத்தை தணிப்பதற்கு குடும்பம் குடும்பமாக சுற்றுலா சென்று நீராடுகின்றனர்.

மேலும் பிரதேச செயலகங்கள் நீதிமன்றங்கள் வங்கிகள் பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் பிரத்தியேக வகுப்புகள் உள்ளிட்ட அரச தனியார் நிறுவனங்கள் வழமை போன்று இயங்குகிறது. எனினும் கடும் வெப்பம் காரணமாக மக்கள் பகல் நேரத்தில் வெளியில் நடமாடுவதை தவிர்ப்பதுடன் இரவு வேளையில் அதிகளவில் நடமாடிவருகின்றனர். அத்துடன் பெரிய நீலாவணை,



புடைவைக்கடைகள், வீதியோர வியாபாரங்கள் போன்றவைகள் வழமை போன்று இயங்கிய போதிலும் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகிறது.

மேலும் அரச தனியார் போக்குவரத்து குறிப்பிட்ட தூரத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலும் மட்டுப்படுத்த மட்டில் இடம்பெற்றது. அதில் பயணம் செய்கின்ற பொதுமக்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதை அவதானிக்க முடிகிறது. இது தவிர அரச தனியார் வங்கிகள் திறந்துள்ளதுடன் ஒந்தாச்சிமடம், காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், அட்டப்பளம், சம்மாந்துறை மாவடிப்பள்ளி, சவளக்கடை, மத்தியமுகாம், உள்ளிட்ட முக்கிய இடங்களில் பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்பட்டன.

அத்தோடு பொதுமக்கள் ஒன்றுகூடும் சில இடங்களில் முப்படையினர் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் கல்முனை பொது சந்தை உட்பட அதனை சூழ உள்ள பாதையோரங்களில் மரக்கறி வியாபாரம் களைகட்டி



மக்கள் வருகை குறைந்தளவில் காணப்படுவதடன் சிலஇடங்களில் ஆர்வத்துடன் பொருள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

கடந்த தினங்களுக்கு முன்னர் இம்மாவட்டத்தில் மழை திடிரென பெய்ததுடன் அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வந்தததை அவதானிக்க முடிந்தது. சவளக்கடை மத்தியமுகாம் பகுதிகளில் உள்ள நீர் நிலைகளின் வான்கதவுகள் தற்போது காணப்பட்டது. மேலும் வியாபார நிலையங்கள் சுப்பர் மார்க்கெட்டுகள் பாமசிகள் எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கப்பட்டாலும் மக்கள் ஆர்வத்தடன் பொருட் கொள்வனவில் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் சில இடங்களில் பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# கிண்ணியா கிராம உத்தியோகத்தர் நியமன அநீதி பிரதி அமைச்சருடன் இம்ரான் எம்.பி. கலந்தாய்வு

(கே எ ஹமீட்)

தற்போது வழங்கப்படும் கிராம உத்தியோகத்தர் நியமனத்துக்காக கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் இருந்து 11 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போதிலும் இருவருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக மீள் பரிசீலனை செய்யுமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் அசோக பிரியந்தவைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் பிரதியமைச்சரைச் சந்தித்து இந்த வேண்டுகோளை அவர் முன்வைத்தார்.

கிராம உத்தியோகத்தர் நியமனத்திற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் நியமனம் பெறும் எண்ணிக்கையினரை விட அதே போன்ற ஒரு மடங்கு தொகையினர் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்படி கிண்ணியாவிலிருந்து 11 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். எனவே, 5 அல்லது 6 பேருக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும். எனினும் தற்போது இருவருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்படுகின்றது. ஏனைய பிரதேச நியமனங்களோடு ஒப்பிடுகையில் கிண்ணியா பிரதேசத்துக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே, இது குறித்து மீள் பரீசீலனை செய்ய வேண்டுமென இம்ரான் எம்.பி பிரதியமைச்சரைக்கேட்டுக்கொண்டார்.

இது விடயத்தை செவிமடுத்த பிரதியமைச்சர் ஏதோ தவறு நடந்து விட்டதாக உணர்கின்றேன். இது குறித்து நடவடிக்கை எடுக்கின்றேன் என உறுதியளித்தார்.(05)

# கட்டுநாயக்கவில் 15 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கட்டுநாயக்கவிமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கவிமானநிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியதகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 15 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் இந்த சிகரெட்டுகளை டுபாயிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கொண்டு வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

(05)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சிறைச்சாலை கைதி தப்பியோட்டம்

களுத்துறை நாகொடை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்தகளுத்துறை சிறைச்சாலை கைதியொருவர் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

வாதுவை, தெல்துவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் 2,300 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்து குற்றச்சாட்டில் களுத்துறை தெற்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்துள்ளார்.

இந்நிலையில், இவர் கடந்த 6 ஆம் திகதி அன்று சிறைச்சாலையில் உள்ள மற்றுமொருகைதியொருவருடன் தகராறில் ஈடுபட்டுக்காயமடைந்த நிலையில் களுத்துறைநாகொடை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்போது, இவர் கழிவறைக்குச் செல்வதாகக் கூறி வைத்தியசாலை கழிவறையின் ஜன்னல் வழியாகத் தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர் போதைப்பொருளுடன் கல்னேவவில் கைது

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என கல்னேவ பொலிஸார் தெரிவித்தனர்.

கல்னேவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கல்னேவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்னேவ பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 8 ஆம் திகதி 480,000 ரூபா பணத்தைத் திருடியுள்ளார்; எனவும், கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி போலி மாணிக்கக் கல்லை விற்பனை செய்து 975,000 ரூபா பண மோசடி செய்துள்ளார் எனவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.05.2024இல் வெளியிடப்பெற்றது